# கொள்கைகளை செயல்முறையில் இடுதல்

இந்தப் பாடத்தொடரில் முதல் இரண்டு பகுதிகளில் நாம், வேதவசனத்திற்கு விளக்க ஆய்வு செய்வது எவ்வாறு - எந்த ஒரு வேதாகம வசனப்பகுதியும் தனது முதல் வாசகர்களுக்குக் கொண்டிருந்த அர்த்தத்தைக் கண்டறிவது எவ்வாறு - என்று படித்தோம். இந்த மூன்றாவது பகுதியில் நாம், வேதவசனங்களை நடைமுறைப் படுத்துவதில் நம்மை வழிநடத்தக்கூடிய கொள்கைகள் யாவை என்று கண்ணோக்கி இருக்கிறோம். இந்தக் கொள்கைகளைச் செயல்முறையில் இடும்போது இவைகள் எவ்வாறு பணிசெய்கின்றன? இந்தப் பாடத்தொடரில் அடங்கியுள்ள ஆலோசனைகளைச் செயல்முறையில் இடுவதற்கு உதவும் நோக்கங்கொண்ட சுருக்கமான வழிகாட்டு குறிப்புகள் கீழே உள்ளன.

## வசனப்பகுதி பழைய ஏற்பாட்டில் இருந்தால்

### விளக்க ஆய்வு

வசனப்பகுதி பழைய ஏற்பாட்டில் இருந்தால், அது என்ன வகையான இலக்கியமாக உள்ளது என்று நாம் முடிவு செய்தல் அவசியமாக உள்ளது: நியாயப்பிரமாணம், வரலாறு (அல்லது எடுத்துரைப்பு), பாடல் அல்லது ஞான இலக்கியம் அல்லது தீர்க்கதரிசனம். பின்பு நாம், இந்தப் பாடத் தொடரின் முதல் இரண்டு இதழ்களில் தரப்பட்ட ஆலோசனைகளைப் பயன்படுத்தி, ஒரு விளக்க ஆய்வைச் செய்ய வேண்டும். வசனப்பகுதி அதன் முதல் வாசகர்களுக்கு அர்த்தப்படுத்தியது என்ன என்பதை இயன்ற வரையில் சாத்தியமான அளவுக்குத் தீர்மானித்தல் என்பது அடுத்த படிநிலையாக உள்ளது.

### நடைமுறைப் பயன்பாடு

"இது எவ்வாறு நடைமுறைப்படுகிறது?" என்று கேட்க நாம் தயாராக இருக்கிறோம்.

*1.* இது, வரவிருந்த மேசியா மற்றும் அவரது இராஜ்யம் பற்றிப் பேசுகிறதா? இது புதிய ஏற்பாட்டில் மறைமுகமாகக் குறிப்பிடப் பட்டுள்ளதா? அப்படியென்றால், இது கிறிஸ்துவைப் பற்றிய நமது புரிந்துகொள்ளுதல் மற்றும் மதிப்பு ஆகியவற்றுடன் கூட்டுவது என்ன?

*2.* இது, பழைய ஏற்பாட்டில் விவரித்துரைக்கப்பட்டபடியும் புதிய ஏற்பாட்டில் உச்சக்கட்டத்தை அடைந்ததுமான மீட்பின் வரலாற்றைப் புரிந்து கொள்ள நமக்கு உதவுகிறதா? அப்படியென்றால் இது, மீட்பிற்கான தேவனுடைய நித்திய திட்டத்தை மதித்துணருவதில் நமக்கு எவ்வாறு உதவுகிறது?

*3.* இது, தேவன், மனிதன் அல்லது மனிதரிடத்தில் தேவன் எதை

எதிர்பார்க்கிறார் என்பது பற்றி சிலவிஷயங்களை நமக்குப் போதிக்கிறதா? அப்படியென்றால், இது போதிப்பது என்ன? இந்த சத்தியங்கள், புதிய ஏற்பாட்டில் போதிக்கப்பட்டுள்ளவற்றுடன் எவ்வாறு உறவுபடுகின்றன?

*4.* இது, புதிய ஏற்பாட்டில் போதிக்கப்பட்டுள்ள வேதாகமக் கொள்கைகளை விவரிக்கிறதா? இவ்வசனப்பகுதியில் காணப்படும் நிகழ்ச்சிகளை அல்லது பாத்திரங்களை, புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் கிறிஸ்தவர்களுக்கு ஒரு பாடத்தைப் போதிப்பதற்காகப் பயன்படுத்தினரா? அப்படியென்றால் அது என்ன?

*5.* இது, தேவன் மீது மாபெரும் அன்புகூரவும் அவரது சத்தியத்திற்கு அர்ப்பணிக்கவும் நம்மை முன்னோக்கிச் செலுத்துகிறதா? இதை வாசித்தல் நமது ஆத்துமாக்களுக்கு ஆறுதலைக் கொண்டு வருமா? சங்கீதங்களில் பல, அவற்றின் முதல் வாசகர்களுக்குச் செய்தது போன்றே, நமது இருதயங்களுக்கும் நமது மனங்களுக்கும் பிரியமானவைகளாக இருந்து நம்மை ஆறுதல்படுத்துகின்றன.

## வசனப்பகுதி புதிய ஏற்பாட்டில் இருந்தால்

### விளக்க ஆய்வு

வசனப்பகுதி புதிய ஏற்பாட்டில் இருந்தால், "இது என்ன வகையான இலக்கியமாக உள்ளது? (இயேசுவின்) வரலாறு (சுவிசேஷங்கள்), வரலாறு (நடபடிகள்), நிருபங்கள் அல்லது தீர்க்கதரிசனம் (வெளிப்படுத்துதல்)?" என்று நாம் கேட்க முடியும். இது சுவிசேஷங்களில் ஒன்றாக இருந்தால், "இது ஒரு உவமையாக உள்ளதா?" என்று நாம் கேட்க வேண்டும். பின்பு நாம், இந்தப்பாடத்தொடரின் முதல் இரண்டு இதழ்களில் காணப்படும் ஆலோசனைகளைப் பயன்படுத்தி விளக்க ஆய்வைச் செய்ய வேண்டும். இவ்வசனப்பகுதி இதன் முதல் வாசகர்களுக்கு அர்த்தப்படுத்தியது என்ன என்பதை நம்மால் இயன்ற அளவுக்கு முடிவு செய்ய வேண்டும்.

### நடைமுறைப் பயன்பாடு

அடுத்ததாக நாம், "இது எவ்வாறு நடைமுறைப்படுகிறது?" என்று கேட்க வேண்டும். *புதிய ஏற்பாட்டில் நாம் வாசிப்பவற்றில் அதிகமானவை, அவற்றின் முதல் வாசகர்களுக்கு நடைமுறைப்பட்ட அதே வழியில் நமக்கும் நடைமுறைப்படுகின்றன.* அப்படிப்பட்ட விஷயங்களில், விளக்க ஆய்வு நடைமுறைப்பயன்பாட்டில் சமமாக உள்ளது. வசனப்பகுதி அதன் முதல் வாசகர்களுக்கு அர்த்தப்படுத்தியது என்ன என்பதை நாம் புரிந்துகொண்ட உடனே, அது நமக்கு அர்த்தப்படுத்துவது என்ன என்பதை நாம் அறிகிறோம். ஒரு வசனப்பகுதி நமக்கு எவ்வாறு நடைமுறைப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்வதற்கு நாம் ஒரு சில கேள்விகளைக் கேட்க முடியும்:

*1.* "இவ்வசனப் பகுதியை நடைமுறைப்படுத்தும் வழியில் இருக்கக் கூடிய சிரமங்கள் யாவை?"

(அ) "இதன் தோற்றகால சந்தர்ப்பப்பொருளில் இது அர்த்தப்படுத்தியது என்ன என்பதை நான் அறிந்திருக்கிறேனா?" முதல் வாசகர்களுக்கு

இதன் அர்த்தம் என்னவாக இருந்தது என்பது தெளிவற்றதாக இருந்தால், இதை நமது சூழ்நிலைகளுக்கு மிகவும் உபதேச ரீதியானதாக நடைமுறைப்படுத்துவதில் நாம் கவனமாக இருக்க வேண்டும்.

(ஆ) "தோற்றகால சந்தர்ப்பப் பொருளுக்கும் இன்றைய நாட்களின் சந்தர்ப்பப் பொருளுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள், வசனப்பகுதியை நான் நடைமுறைப்படுத்தும் விதத்தை பாதிக்குமா?"

(இ) "வசனப்பகுதியானது அதற்கு விளக்கம் அளித்தலை அல்லது அதன் நடைமுறைப் பயன்பாட்டைப் பாதிக்கக் கூடிய வகையில் ஏதேனும் சிரமத்தை - ஒருவேளை வேறொரு வசனப்பகுதியுடன் உள்ளதாகத் தோன்றுகிற எதிர்மாறான கருத்தை - முன்வைக்கிறதா? அப்படி என்றால், அவ்வாறான சிரமங்கள் எவ்வாறு தீர்த்து வைக்கப்பட முடியும்?"

2. பிரச்சனைகள் எதுவும் நிலவுவது இல்லை என்றால், அல்லது இப்படிப்பட்ட பிரச்சனைகள் தீர்த்துவைக்கப்பட்டது என்றால், பின்பு நாம் "இவ்வசனப்பகுதியை எனது அன்றாட வாழ்வில் நான் எவ்வாறு நடைமுறைப்படுத்த வேண்டும்?" என்று கேட்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

(அ) "இவ்வசனப் பகுதியில் போதிக்கப்பட்டுள்ள அல்லது மறைமுகமாக உணர்த்தப் பட்டுள்ள இறையியல் சத்தியங்கள் யாவை?" புதிய ஏற்பாட்டில் உள்ள ஒவ்வொரு வசனப்பகுதியும், கிறிஸ்தவர்கள் மாறுபட்ட வகையில் நடந்துகொள்ள வேண்டும் என்று புத்தி சொல்வதை நோக்கங் கொண்டிருப்பதில்லை. சில வசனப்பகுதிகள் சுவிசேஷ செய்தியை மிகத்தெளிவாகப் புரிந்துகொள்ள நமக்கு உதவுகின்றன.

(ஆ) "இவ்வசனப் பகுதியின் போதனையானது வேதாகமத்தில் வேறொரு இடத்தில் உள்ள போதனையுடன் எவ்வாறு உறவுபடுகிறது?" வேதாகமம் ஒரு பாடக்கருத்தின்மீது போதிக்கும் எல்லா விஷயங்களையும் ஆழ்ந்து சிந்தித்தல் என்பதே வேதாகமப் பாடக்கருத்து எதைப்பற்றிய சத்தியத்தையும் அடையும் வழியாக உள்ளது.

(இ) "இவ்வசனப் பகுதி என்னிடத்தில் எதையாவது கேட்டுக்கொள்கிறதா? இவ்வசனப் பகுதி கேட்டுக்கொள்வதை நான் எவ்வாறு நடைமுறைப்படுத்தத் தொடங்க முடியும்?"

(ஈ) "இவ்வசனப்பகுதியில் உள்ள சத்தியம் என்னை எவ்வாறு உணரச் செய்கிறது? அதில் இருந்து நான், சமாதானத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமா? அதன் மூலம் நான் அசைக்கப்பட அல்லது மன எழுச்சியூட்டப்பட வேண்டுமா? அதின் காரணமாக நான் தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கு இன்னும் அதிக தீர்மானம் கொண்டாக வேண்டுமா?"[1]

## ஒரு உதாரணம்: ரோமர் 12:1, 2

இந்தக் கொள்கைகள் எவ்வாறு செய்முறையில் இடப்படுகின்றன என்பதை,

*பின்வரும் விளக்க ஆய்வும் நடைமுறைப் பயன்பாடும் விவரிக்கிறது. இங்கு ரோமர் 12:1, 2 வசனப்பகுதி பயன்படுத்தப்பட்டுள்ளது:*

> *அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத் தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.*

## விளக்க ஆய்வு

*1ம் வசனத்தின் தொடக்கத்தில் உள்ள "அப்படியிருக்க" என்பது இவ்வசனப் பகுதியை, பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் இதற்கு முன்பு கூறிய எல்லாவற்றுடனும் இணைக்கிறது. நிருபத்தின் இப்பகுதி வரைக்கும் பவுல், தேவனுடைய கிருபையையும் இரக்கத்தையும் வலியுறுத்திக் கொண்டிருந்தார். "தேவனுடைய இரக்கங்கள்" நமது சரீரங்களை "பரிசுத்தமும் ஜீவனுள்ள பலியாக" முன்வைக்க, காரணமாக வேண்டும் என்று பவுல் கூறினார். (பன்மைச் சொல்லைக் கவனியுங்கள்: தேவனுடைய "இரக்கங்கள்" பலமடங்காக இருக்கின்றன.) இறந்த மிருகங்களே பழைய உடன்படிக்கையின் கீழ் பலிகளாகச் செலுத்தப்பட்டன; இன்றைய நாட்களில் செலுத்தப்படும் பலிகள் "ஜீவனுள்ளவையாக" இருக்கின்றன - நம்மையே நாம் பலிசெலுத்துகிறோம்! நமது "ஆராதனையின் ஆவிக்குரிய ஊழியம்"தான், தேவனுக்கு அர்ப்பணிக்கப்படும் (இதுவே "பரிசுத்தம்" என்ற வார்த்தையின் அர்த்தமாக உள்ளது) இப்படிப்பட்ட பலிகளாக உள்ளன என்று பவுல் கூறினார். நமது "ஆராதனையின் ஆவிக்குரிய ஊழியம்" என்ற இச்சொற்றொடர் பல் வேறு பதிப்புகளில் வேறுபட்ட வகைகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது: "உங்கள் புத்தியுள்ள ஊழியம்" (KJV); "உங்கள் ஆவிக்குரிய ஆராதனை" (RSV); "மனதினாலும் இருதயத்தினாலும் செலுத்தப்படும் ஆராதனை" (NEB); "மதி நுட்பமான ஆராதனையின் செயல்பாடு" (Phillips); "உங்கள் ஆவிக்குரிய ... ஆராதனை" (NIV). நமது சரீரங்களைத் தேவனுக்கு அர்ப்பணித்தல் என்பது, தேவனுக்கு முன்வைக்கப்படும் "ஆவிக்குரிய" அல்லது "புத்தியுள்ள" "ஊழியமாக" அல்லது "ஆராதனையாக" இருக்கிறது (இது சபையின் வழக்கமான கூடுகைகளில் இருந்து பிரிந்துள்ளது).*

*நாம் நமது சரீரங்களைத் தேவனுக்கு ஜீவனுள்ள பலியாகச் செலுத்துவது எப்படி? ஒருவேளை நாம், ரோமர் 12:1ம் வசனத்தை 12ம் அதிகாரத்தின் எஞ்சிய பகுதிக்கு (ஒருவேளை ரோமருக்கு எழுதிய நிருபத்தின் எஞ்சிய பகுதி முழுவதற்கும்கூட) "ஆய்வுக்கருத்து வாக்கியமாக" கண்ணோக்க வேண்டும். 2ம் வசனத்தின்படி, நாம் தேவனுக்கு இந்தப் பலியை, "இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல்" இருத்தலினால் - உலகப்பிரகாரமானவர்களாக இராதிருப்பதினால் - செலுத்துகிறோம் (ஒப்பிடுக*

யாக்கோபு 1:27; 1 யோவான் 2:15). நாம், நமது மனங்கள் "புதிதாகுதலின்" மூலமாக "மறுரூபமாக்கப்" படுகிறோம் - அல்லது மாற்றம் அடைகிறோம். தேவன் காணுகிற வகையில் விஷயங்களைக் காண நாம் மாறுபட்ட வகையில் சிந்திக்கக் கற்றுக்கொள்கிறோம். இதை நாம் செய்யும்போது, "தேவனுடைய சித்தம் என்னவாக உள்ளது என்பதை நாம் நிரூபிப்போம்." இவ்விடத்தில் "நிரூபித்தல்" என்ற வார்த்தை அனேகமாக, "நீரூபிக்க அல்லது அனுபவத்தினால் அறிய" ("அனு பவத்தில் நிரூபிக்க"; Phillips); என்று அர்த்தப்படலாம். [தமிழ் வேதாகமத்தில் இது ''பகுத்தறியத்தக்கதாக'' என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.] உலகப்பிரகாரமாக இருத்தலைத் தவிர்த்து நாம் நம்மையே தேவனுக்கு அர்ப்பணித்து மறுரூபமாக்கப் பட்டிருக்கும்போது, தேவனுடைய சித்தத்தின்படி செய்தலில் இருந்து வருகிற ஆசீர்வாதங்களை நாம் அறிகிறோம். 2ம் வசனம், தேவனுடைய சித்தத்தை "நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம்" என்று விவரிப்பதைக் கொண்டு முடிகிறது. இந்த உலகத்தில், தேவனுடைய சித்தத்தைக் காட்டிலும் அதிகம் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாக அல்லது அதிக பரிபூரணமானதாக வேறு எதுவும் இருப்பதில்லை!

## நடைமுறைப் பயன்பாடு

இவ்வசனப் பகுதியானது புதிய ஏற்பாட்டில் உள்ளது மற்றும் இது நிருபங்களில் ஒன்றில் உள்ளது - இது முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்ட நிருபமாகும் - என்பதை நாம் உற்றுக் கவனிக்கிறோம். ஆகையால் நாம், வேறுவகையாக நம்புவதற்கு நல்ல காரணம் இருந்தால் ஒழிய, *புதிய ஏற்பாட்டில் ஏவுதல் பெற்ற எழுத்தாளர்கள் மூலமாகத் தேவன், அன்றிருந்த கிறிஸ்தவர்களுக்கு என்னென்ன அறிவுறுத்துதல்கள் கொடுத்தாரோ, அவையாவும் இன்றைக்கு நமக்கும் நடைமுறைப்படுகின்றன* என்ற யூகத்துடன் தொடங்கலாம்.

ரோமர் 12:1, 2 பற்றி வேறுவகையில் நம்புவதற்குக் காரணங்கள் ஏதாவது உள்ளனவா?

''வசனப்பகுதியின் அர்த்தம் தெளிவாக உள்ளதா?'' ஆம். ''உங்கள் ஆராதனையின் ஆவிக்குரிய ஊழியம்'' என்ற சொற்றொடரின் அர்த்தத்தில் விளக்கவுரையாளர்கள் வேறுபட்டிருக்கையில், இவ்வசனங்களின் முதன்மைச் செய்தியின் மீது அவர்கள் பெரிதாக வேறுபட்டிருப்பதில்லை.

"வசனப்பகுதியைப் புரிந்துகொள்வதன் மீதும் நடைமுறைப்படுத்துவதன் மீதும் செய்விளைவு ஏற்படுத்தக் கூடிய வகையில், இதன் அன்றைக்கான சந்தர்ப்பப்பொருள் மற்றும் இன்றைக்கான சந்தர்ப்பப்பொருள் ஆகியவற்றிற்கு இடையில் வேறுபாடுகள் ஏதாவது உள்ளனவா?" இல்லை. இதன் தோற்றகால வாசகர்கள், மாறுபட்ட இடத்தில் மாறுபட்ட சூழ்நிலைகளின்கீழ் வாழ்ந்தனர்; ஆனால் எல்லாச் சூழ்நிலைகளிலும், எல்லாக் கிறிஸ்தவர்களும், தாங்கள் செய்யும்படி கூறப்பட்டவற்றைச் செய்ய வேண்டியவர்களாக உள்ளனர்.

"இவ்வசனப் பகுதியில் சிரமம் ஏதாவது இருக்கிறதா?; எடுத்துக்காட்டாக, இது வேறு எந்த வசனப்பகுதிக்காவது நேர்மாறானதாக உள்ளதா?" இல்லை.

அப்படியென்றால் நாம் இதை இன்றைக்கு நடைமுறைப்படுத்துதலை எவ்வாறு செய்ய முடியும்?

“இவ்வசனப் பகுதியில் போதிக்கப்பட்டுள்ள அல்லது மறைமுகமாக உணர்த்தப்பட்டுள்ள இறையியல் சத்தியங்கள் யாவை?” முதலாவது, இவ்வசனப் பகுதி, மனிதரின் இயல்பு பற்றிய சில விஷயங்களைப் போதிக்கிறது. மனிதர் என்பவர், அவர் வாசம்செய்கிற உடலாக மாத்திரம் இருப்பதில்லை. ஒவ்வொருவரும் ஒரு உடலைக் கொண்டிருக்கையில், அந்த உடலே அவரது எல்லாமுமாக இருப்பதில்லை என்று இவ்வசனப் பகுதி மறைமுகமாக உணர்த்துகிறது.

“இவ்வசனப் பகுதியில் உள்ள போதனையானது, வேதாகமத்தின் வேறு எவ்விடத்திலாவது போதிக்கப்படும் விஷயத்துடன் எவ்வாறு உறவுபடுகிறது?” நாம் நம்மை முற்றிலுமாகத் தேவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும் (நாம் யாராக இருக்கிறோமோ அதினாலும் நம்மிடத்தில் உள்ள எல்லாவற்றினாலும் தேவன் மீது அன்புகூர வேண்டும்) மற்றும் நாம் “இந்த உலகத்திற்கு ஒத்த வேஷம் தரிக்கக் கூடாது” என்று மற்ற வசனப்பகுதிகள் போதிக்கின்றன அல்லது மறைமுகமாக உணர்த்துகின்றன.

‘‘இவ்வசனப்பகுதி என்னிடத்தில் கேட்டுக்கொள்வது என்ன? இவ்வசனப்பகுதி கேட்டுக்கொள்வதை *நடைமுறைப்படுத்துவதற்கு* நான் என்ன செய்ய வேண்டும்?” இந்தக் கேள்விகளுக்கு நாம் ஒவ்வொருவரும் நமக்கு நாமே பதில் அளிக்க வேண்டும். ஒரு கிறிஸ்தவருக்கு, வேதாகம வகுப்பில் பாடங்களின் வரிசை ஒன்றைப் போதிக்க ஒப்புக்கொடுத்தல் என்பது ‘‘பரிசுத்தமும் ஜீவனுமான பலியாக’’ இருக்கலாம். இன்னொருவருக்கு அது, அவரது கொடுத்தலை 50 சதவிகிதம் கூட்டுதலாக இருக்கலாம். இன்னொருவருக்கு அது, பாவம் நிறைந்த பழக்கங்களை முறித்து ஜெபத்திலும் வேதவாசிப்பிலும் அதிக நேரத்தைச் செலவிடுதலாக அர்த்தப்படலாம். ஒவ்வொரு கிறிஸ்தவரும், “கர்த்தருக்கு என்னையே நான் முழுமையாக அர்ப்பணிக்க, நான் செய்ய வேண்டியது என்ன?” என்று கேட்டுக்கொள்ள வேண்டும்.

“இவ்வசனப் பகுதியில் போதிக்கப்பட்ட சத்தியத்தைப் பற்றி நான் எவ்வாறு உணர வேண்டும்?” நாம் “ஜீவனும் பரிசுத்தமுமான பலியாக” ஆகமுடியும் என்ற கருத்து நம்மை மன எழுச்சி அடையச் செய்ய வேண்டும்! இன்றைய நாட்களில் நாம், பலிபீடத்தின்மீது ஒரு மிருகத்தைப் படைக்க வேண்டும் என்று தேவன் நம்மிடத்தில் கேட்டுக்கொள்வதில்லை; நாம் அந்தப் பலிபீடத்தின்மீது தாவி ஏறி அமர வேண்டும் என்றே அவர் நம்மிடம் கேட்டுக்கொள்கிறார்!

---

குறிப்பு

[1]இந்த இடத்தில், “இவ்வசனப் பகுதியில் போதிக்கப்படும் சத்தியம் என்னை எப்படி உணரச் செய்கிறது?’’ என்று கேட்பது பொருத்தமானதாக உள்ளது. தேவன் நமது உணர்வுக்கும் மற்றும் நமது மதிநுட்பத்திற்கும்கூட வேண்டுகோள் விடுக்கிறார். பிரசங்கியார்கள் - எடுத்துக்காட்டாக, யோவான் 3:16ன் மீது பேசுவதில் - தேவனுடைய பெரிதான அன்பைப் பற்றிய சிலவற்றை நாம் *உணருவதற்கு* உதவ முயற்சி செய்கின்றனர். வசனப்பகுதிகளை நாம் வாசிக்கும்போது, நாம் “உணருவதற்கு” நம்மை அனுமதிக்க வேண்டும். அதே வேளையில், உணர்வுகள் என்பவை மார்க்கத்தில் பாதுகாப்பான வழிகாட்டியாக இருப்பதில்லை என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். தேவனுடைய வசனம் போதிக்கிறது எதுவோ அது மாத்திரமே நாம் என்ன

செய்ய வேண்டும் என்பதைத் நமக்குக்கூற முடியும்; ஆனால் நாம் வாசிப்பவற்றினால் அசைக்கப்படும்படி நம்மை நாம் அனுமதிக்கும்போது, தேவனுடைய வசனம் நம்மை என்ன செய்யும்படி கூறுகிறதோ, அதை நாம் *செய்வதற்கு* அதிக சாத்தியக்கூறு உள்ளது.